இனிமையான குழந்தைகளே! அதிகாலையில் எழுந்து பாபாவுடன் இனிமையான ஆன்மிக உரையாடல் செய்யுங்கள். பாபா கற்றுத் தந்துள்ள அறிவுரைகளை அசை போட்டுக் கொண்டே இருங்கள்.

கேள்வி: நாள் முழுவதும் குஷி-குஷியிலேயே கழிய வேண்டும் - அதற்காக எந்த ஒரு யுக்தியை உருவாக்க வேண்டும்?

பதில்: தினந்தோறும் அமிர்தவேளை எழுந்து ஞானத்தின் விசயங்களைச் சிந்தனை செய்யுங்கள். தனக்குத் தானே பேசிக் கொள்ளுங்கள். முழு டிராமாவின் முதல்-இடை-கடை பற்றி சிந்தனை செய்யுங்கள். பாபாவை நினைவு செய்வீர்களானால் முழு நாளும் குஷியிலேயே கழிந்து விடும். மாணவர்கள் தங்களின் படிப்பின் ஒத்திகை (ரிவைஸ்) பார்க்கிறார்கள். குழந்தைகளாகிய நீங்களும் உங்களுடையதை ஒத்திகை (திரும்பவும்) பாருங்கள்.

பாடல்: இன்று இருளில் உள்ளது மனித இனம்.........

ஓம் சாந்தி. இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் பாடலைக் கேட்டீர்கள். நீங்கள் பகவானின் குழந்தைகள் அல்லவா? நீங்கள் அறிவீர்கள், பகவான் நமக்கு வழி காட்டிக் கொண்டிருக்கிறார் நாங்கள் இருளில் உள்ளோம் என்று அவர்கள் அழைத்துக் கொண்டே இருக்கின்றனர். ஏனென்றால் பக்தி மார்க்கமே இருளின் மார்க்கம். பக்தர்கள் சொல்கின்றனர், நாங்கள் உங்களைச் சந்திப்பதற்காக அலைந்து கொண்டிருக்கிறோம். சில சமயம் தீர்த்த ஸ்தலங் களில், சில சமயம் எங்காவது தான-புண்ணியம் செய்து, மந்திரம் ஜெபிக்கின்றனர். அநேக விதமான மந்திரங்கள் சொல்கின்றனர். பிறகும் கூட நாம் இருளில் உள்ளோம் என்பதை யாரும் புரிந்து கொள்வதில்லை. நீங்கள் விருட்சத்தில் முதல்-முதலில் வருகிறீர்கள். புது உலகில் போய் இராஜ்யம் செய்கிறீர்கள். பிறகு ஏணிப்படியில் இறங்கி வருகிறீர்கள். இதனிடையில் இஸ்லாமியர், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் வருகின்றனர். இப்போது பாபா மீண்டும் மரக்கன்று நட்டுக் கொண்டிருக்கிறார். அதிகாலை எழுந்து இதுபோன்று ஞானத்தின் விசயங்களை சிந்தனை செய்ய வேண்டும். இது எவ்வளவு அற்புதமான நாடகம்! இந்த டிராமாவின் ஃபிலிம் ரோலினுடைய கால அளவு (ஆயுள்) 5000 ஆண்டுகள். சத்யுகத்தின் ஆயுள் இவ்வளவு, திரேதாயுகத்தின் ஆயுள் இவ்வளவு........ பாபாவுக்குள்ளும் இந்த ஞானம் முழுவதும் உள்ளது தானே? உலகத்தில் வேறு யாரும் இதை அறிந்திருக்கவில்லை. ஆக, குழந்தைகள் அதிகாலை எழுந்து முதலில் பாபாவை நினைவு செய்ய வேண்டும். மேலும் ஞானத்தைக் குஷியோடு சிந்தனை செய்ய வேண்டும். இப்போது நாம் முழு டிராமாவின் முதல்-இடை-கடை பற்றி அறிந்து கொண்டு விட்டோம். பாபா சொல்கிறார், கல்பத்தின் ஆயுளே 5000 ஆண்டுகள் தான். மனிதர்கள் இலட்சக்கணக்கான ஆண்டுகள் எனச் சொல்லி விடுகின்றனர். எவ்வளவு அற்புதமான நாடகம்! பாபா வந்து என்ன கற்றுத் தருகிறாரோ, அதைப் பிறகு சிந்தனை செய்ய வேண்டும். மீண்டும் ரிவைஸ் செய்து பார்க்க வேண்டும். மாணவர்கள் படிப்பை மீண்டும் படித்துப் பார்க்கின்றனர் அல்லவா?

இனிமையிலும் இனிமையான குழந்தைகள் நீங்கள் முழு டிராமாவையும் அறிந்து கொண்டு விட்டீர்கள். பாபா - இது அநாதி அவிநாசி டிராமா என்று

எவ்வளவு எளிய முறையில் சொல்லி யுள்ளார்! இதில் வெற்றி பெறுகின்றனர், பிறகு தோல்வியடைகின்றனர். இப்போது சக்கரம் முடிவடைந்தது, நாம் இப்போது வீட்டுக்குச் செல்ல வேண்டும். பாபாவின் கட்டளை கிடைத் துள்ளது, தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள். இந்த டிராமாவின் ஞானத்தை ஒரு தந்தை மட்டுமே தருகிறார். நாடகம் ஒருபோதும் இலட்சம் ஆண்டுகள் நடக்காது. யாருக்கும் நினைவிருக் கவும் செய்யாது. இந்த 5000 ஆண்டுகளின் சக்கரம் முழுவதும் உங்கள் புத்தியில் உள்ளது. எவ்வளவு நல்ல வெற்றி தோல்வியின் விளையாட்டு! அதிகாலை எழுந்து இப்படி-இப்படி சிந்தனை செய்ய வேண்டும். நம்மை பாபா, இராவணன் மீது வெற்றி கொள்ளச் செய்கிறார். இப்படி-இப்படி வார்த்தைகளை அதிகாலையில் எழுந்து தனக்குத் தான் பேசிக் கொள்ள வேண்டும். அப்போது அது பழக்கமாக ஆகிவிடும். இந்த எல்லையற்ற நாடகத்தைப் பற்றி யாருக்கும் தெரியவில்லை. நடிகராக இருந்து கொண்டு நாடகத்தின் முதல்-இடை-கடை பற்றி அறிந்து கொள்ளவில்லை. இப்போது நாம் பாபாவின் மூலம் தகுதியுள்ளவர்களாக ஆகிக் கொண்டிருக்கிறோம்.

பாபா தம்முடைய குழந்தைகளைத் தமக்குச் சமமாக ஆக்குகிறார். தமக்குச் சமமாக என்ன, தந்தையோ குழந்தைகளைத் தம் தோள் மீது அமர்த்திக் கொள்கிறார். பாபாவுக்குக் குழந்தைகள் மீது எவ்வளவு அன்பு. உள்ளது! எவ்வளவு நன்றாகப் புரிய வைக்கிறார் - இனிமையிலும் இனிமை யான குழந்தைகளே, நான் உங்களை உலகத்தின் எஜமானர் ஆக்குகிறேன். நான் எஜமானன் ஆவதில்லை. குழந்தைகளாகிய உங்களை மணமிக்க மலர் களாக்கிப் பிறகு ஆசிரியராகி படிப்பு சொல்லித் தருகிறேன். பிறகு சத்கதிக்காக ஞானம் தந்து உங்களை சாந்திதாம்- சுகதாமத்திற்கு அதிகாரி ஆக்குகிறேன். நானோ நிர்வாணதாமத்தில் அமர்ந்து கொள்கிறேன். லௌகீக தந்தையும் உழைத்து, செல்வம் சம்பாதித்து அனைத்தையும் குழந்தைகளுக்குக் கொடுத்து விட்டு தான் வானப்ரஸ்தத்தில் சென்று பஜனை முதலியவற்றைச் செய்கின்றனர். ஆனால் இங்கோ பாபா சொல்கிறார், வானப்ரஸ்த அவஸ்தா என்றால் குழந்தைகளுக்குப் புரிய வைத்து நீங்கள் இந்த சேவையில் ஈடுபட்டிருக்க வேண்டும். பிறகு இல்லற விவகாரங்களில் மாட்டிக் கொள்ள கூடாது. நீங்கள் தனக்கும் மற்றவர்க்கும் நன்மை செய்து கொண்டே இருங்கள். இப்போது உங்கள் அனைவருக்கும் வானப்ரஸ்த நிலை. பாபா சொல்கிறார், உங்களை சப்தத்திற்கு அப்பால் கொண்டு செல்வதற்காக நான் வருகிறேன். அபவித்திர ஆத்மாக்களோ செல்ல முடியாது. இதை பாபா நேராகவே வந்து புரிய வைத்துக் கொண்டிருக்கிறார். பலனும் நம் முன் உள்ளது. அங்கோ (சென்டர்களில்) பிறகு குழந்தைகள் அமர்ந்து சொல்கின்றனர். இங்கே (மதுபனில்) பாபா முன்பாக அமர்ந்து உள்ளார். அதனால் தான் மதுபனுக்கு மகிமை உள்ளது. ஆக, பாபா சொல்கிறார், அதிகாலை எழுவதற்கான பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பக்தியும் கூட மனிதர்கள் அதிகாலையில் எழுந்து செய்கின்றனர். ஆனால் அதன் மூலம் ஆஸ்தியோ கிடைக்காது. படைப் பவராகிய தந்தையிடமிருந்து தான் ஆஸ்தி கிடைக்கின்றது. ஒருபோதும் படைப்பிடமிருந்து ஆஸ்தி கிடைக்க முடியாது. அதனால் சொல்கின்றனர், நாங்கள் படைப்பவர் மற்றும் படைப்பின் முதல்-இடை-கடை பற்றி அறிந்து கொள்ளவில்லை. அவர்கள் அறிந்திருந்தால் அது பரம்பரையாக நடந்து வந்திருக்கும். குழந்தைகள் இதையும் புரிய வைக்க வேண்டும் - அதாவது நாம் எவ்வளவு சிரேஷ்டமான தர்மத்தினராக இருந்தோம், பிறகு எப்படி

தர்மமும் தாழ்ந்து கர்மத்திலும் கீழானவராக ஆகியுள்ளோம். மாயா காட்ரெஜ் பூட்டுப் போட்டு விடுகின்றது. நீங்கள் புத்திசாலி களுக்கெல்லாம் புத்திசாலியாக இருப்பவர், இவர்களுடைய புத்தியின் பூட்டைத் திறந்து விடுங்கள் என்று அதனால் பகவானுக்குச் சொல்கின்றனர். இப்போதோ பாபா நம் முன் வந்து புரிய வைத்துக் கொண்டிருக்கிறார். நான் ஞானக்கடலாக இருக்கிறேன், உங்களுக்கு இவர் மூலம் புரிய வைக்கிறேன். எந்த ஞானம்? இந்த சிருஷ்டிச்சக்கரத்தின் முதல்-இடை-கடை பற்றிய ஞானத்தை எந்த ஒரு மனிதராலும் தர முடியாது. சத்சங்கம் முதலியவற்றிற்குச் செல்வதைக் காட்டிலும் பள்ளிக்கூடத்தில் படிப்பது நல்லது. படிப்பு வருமானத்திற்கு ஆதாரம். சத்சங்கங்களிலோ எதுவும் கிடைக்காது. தான-புண்ணியம் செய்யுங்கள், இதைச் செய்யுங்கள், காணிக்கை வையுங்கள் என்று செலவு மேல் செலவு தான். பைசாவும் வையுங்கள், விழுந்து வணங்கவும் செய்யுங்கள். முட்டியே தேய்ந்து விடுகின்றது. இப்போது குழந்தைகளாகிய உங்களுக்குக் கிடைக்கின்ற ஞானத்தை சிந்தனை செய்வதற்கான பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். மேலும் மற்றவர்களுக்கும் புரிய வையுங்கள். பாபா சொல்கிறார், இப்போது ஆத்மா உங்கள் மீது பிரகஸ்பதி (குரு) தசா அமர்ந்துள்ளது. விருட்சபதி பகவான் உங்களுக்குப் படிப்பு சொல்லித் தந்து கொண்டிருக்கிறார். உங்களுக்கு எவ்வளவு குஷி இருக்க வேண்டும்! பகவான் படிப்பு சொல்லித் தந்து நம்மை பகவான்-பகவதி ஆக்குகிறார். ஓஹோ! அப்படிப்பட்ட தந்தையை எவ்வளவு நினைவு செய்வோமானால் விகர்மங்கள் விநாசமாகும்! இவ்வாறெல்லாம் விசார் சாகர் மந்தன் செய்கின்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தாதா நமக்கு இந்த தந்தை மூலம் ஆஸ்தி கொடுத்துக் கொண்டி ருக்கிறார். அவரே சொல்கிறார், நான் இந்த இரதத்தின் ஆதாரத்தை எடுத்துக் கொள்கிறேன். உங்களுக்கு ஞானம் கிடைத்துக் கொண்டிருக்கிறது இல்லையா? ஞான கங்கைகள் ஞானம் சொல்லிப் பவித்திரமாக்குகின்றனரா அல்லது கங்கையின் தண்ணீரா? இப்போது பாபா சொல்கிறார், குழந்தைகளே, நீங்கள் பாரதத்திற்கு உண்மையிலும் உண்மையான சேவை செய்கிறீர்கள். அந்த சமூக சேவகர்களோ எல்லைக்குட்பட்ட சேவை செய்கின்றனர். இது தான் ஆன்மிக, உண்மையான சேவை. பகவான் தந்தை சொல்லிப் புரிய வைக்கிறார், பகவான் புனர்ஜென்மம் எடுக்காதவர். ஸ்ரீகிருஷ்ணரோ முழு 84 பிறவிகளை எடுக்கிறார். அவரது பெயர் கீதையில் போடப்பட்டுள்ளது. நாராயணரின் பெயரை ஏன் போடுவதில்லை? அதாவது கிருஷ்ணர் தான் நாராயணராக ஆகிறார் என்று இதுவும் யாருக்கும் தெரியாது. ஸ்ரீகிருஷ்ணர் இளவரசராக இருந்தார், பிறகு இராதையுடன் சுயம்வரம் ஆனது. இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு ஞானம் கிடைத்துள்ளது. சிவபாபா நமக்குப் படிப்பு சொல்லித் தருகிறார் என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். அவர் பாபாவாகவும் உள்ளார், ஆசிரியராகவும் சத்குருவாகவும் உள்ளார். சத்கதி அளிக்கிறார். உயர்ந்தவரிலும் உயர்ந்தவர் பகவான் சிவன் தான். அவர் சொல்கிறார், எனக்கு நிந்தனை செய்பவர்கள் உயர்ந்த பதவி பெற முடியாது. குழந்தைகள் படிக்கவில்லை என்றால் ஆசிரியரின் கௌரவம் போய்விடும். பாபா சொல்கிறார், நீங்கள் எனது கௌரவத்தைப் போக்கிவிடக் கூடாது. படித்துக் கொண்டே இருங்கள். நோக்கம் மற்றும் குறிக்கோளோ தெரிந்து விட்டது. அந்த குருக்கள் தங்களைப் பற்றிச் சொல்லிக் கொள்கின்றனர். அதனால் மனிதர்கள் பயந்து விடுகின்றனர். ஏதாவது சாபம் கிடைத்துவிடக் கூடாதே என்று பயப்படுகின்றனர். குருவிடம் கிடைத்துள்ள மந்திரத்தையே சொல்லிக் கொண்டுள்ளனர். சந்நியாசிகளிடம்

கேட்கப் படுகின்றது, நீங்கள் வீடு-வாசலை எப்படி விட்டீர்கள் என்று. இந்த உலகீய விஷயங்களைக் கேட்காதீர்கள் எனச் சொல்கின்றனர். அட, ஏன் சொல்ல மாட்டேனென்கிறீர்கள்? நீங்கள் யார் என்பது எங்களுக்கு எப்படித் தெரியும்? கூர்மையான புத்தி உள்ளவர்கள் இதுபோல் உரையாடுவார்கள். அஞ்ஞான காலத்தில் சிலருக்கு நஷா உள்ளது. சுவாமி இராமதீர்த்தருக்கு முக்கியமான சீடராக நாராயணன் என்பவர் இருந்தார். அவருடைய புத்தகங்கள் முதலியவற்றை (பிரம்மா) பாபா படித்துள்ளார். பாபாவுக்கு இதெல்லாம் படிப்பதில் ஆர்வம் இருந்தது. சிறு வயதில் வைராக்கியம் வந்தது. பிறகு ஒரு முறை திரைப்படம் பார்த்தார். அவ்வளவு தான், மனநிலை கெட்டுப்போய் விட்டது. சாதுத்தன்மை மாறி விட்டது. ஆக, இப்போது பாபா புரிய வைக்கிறார், அந்த குருமாரெல்லாம் பக்தி மார்க்கத்தவர்கள். அனைவருக்கும் சத்கதி அளிப்பவரோ ஒருவர் தான். அவரைத் தான் அனைவரும் நினைவு செய்கின்றனர். எனக்கு ஒரு கிரிதர கோபாலனைத் தவிர வேறு யாரும் இல்லை என்று பாடவும் செய்கின்றனர். கிரிதரன் என்று கிருஷ்ணருக்குச் சொல்கின்றனர். உண்மையில் நிந்தனை பெறுபவர் இந்த பிரம்மா தான். கிருஷ்ணரின் ஆத்மா எப்போது கடைசியில் கிராமத்துச் சிறுவனாக, தமோபிரதானமாக ஆகின்றதோ, அப்போது நிந்தனை பெற்றுள்ளது. உண்மையில் இவர் தான் கிருஷ்ணரின் ஆத்மா ! கிராமத்தில் வளர்ந்தவர். சாலையில் சென்று கொண்டிருந்த பிராமணன் வழியில் சிக்கிக் கொண்ட தாகச் சொல்வார்கள். அதாவது பாபா பிரவேசமான பிறகு எவ்வளவு நிந்தனை பெற்றார்! அமெரிக்கா வரை சப்தம் (தாக்கம்) சென்றது. அற்புதமான டிராமா! இப்போது நீங்கள் அறிவீர்கள், அதனால் குஷி ஏற்படுகின்றது. இப்போது பாபா புரிய வைக்கிறார், இந்த சக்கரம் எப்படிச் சுற்று கிறது என்று. நாம் எப்படி பிராமணராக இருந்தோம், பிறகு சத்திரிய, வைசிய, சூத்திரராக....... ஆனோம். இது 84 பிறவிகளின் சக்கரம். இவையனைத்தும் நினைவில் வைக்க வேண்டும். படைப்பவர் மற்றும் படைப்பின் முதல்-இடை-கடை பற்றி அறிந்து கொள்ள வேண்டும். அதை யாரும் அறிந்திருக்கவில்லை. குழந்தைகள் நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள், நாம் உலகத்தின் எஜமானர் ஆகிறோம், இதில் எந்த ஒரு கஷ்டமோ கிடையாது. ஆசனம் முதலியவற்றை செய்யுங்கள் எனச் சொல்வதில்லை. (வெளியுலகில்) ஹடயோகத்தை அப்படிச் சொல்லித் தருகின்றனர், கேட்கவே வேண்டாம். ஒரு சிலருடைய மூளையே கெட்டுப் போகின்றது. பாபா எவ்வளவு சுலபமாக வருமானத்தை சம்பாதிக்கச் செய்கிறார்! இது 21 பிறவிகளுக்கான உண்மை யான வருமானம். உங்களுடைய உள்ளங்கையில் சொர்க்கம் உள்ளது. பாபா குழந்தைகளுக்காக சொர்க்கத்தின் பரிசைக் கொண்டு வருகிறார். இதுபோல் எந்த ஒரு மனிதரும் சொல்ல முடியாது. பாபா தான் சொல்கிறார், இவருடைய (பிரம்மா) ஆத்மாவும் கேட்கிறது. ஆக, குழந்தைகள் காலையில் எழுந்து இப்படியான சிந்தனைகள் செய்ய வேண்டும். பக்தர்களும் கூட காலையில் குப்தமாக மாலை சுற்றுகின்றனர். அதை கவுமுக் (பசுவின் வாய்) எனச் சொல்கின்றனர். அதற்குள் கையை விட்டு மாலை சுற்றுகின்றனர். இராம்-இராம்............ வாத்தியம் இசைப்பது போல் சொல் கின்றனர். உண்மையில் குப்தமானது இது தான் - பாபாவை நினைவு செய்வது. அஜபாஜாப் (.இடை விடாத நினைவு) எனச் சொல்லப் படுவது இது தான். குஷி இருக்கிறது, எவ்வளவு அற்புதமான டிராமா! இது எல்லையற்ற நாடகம். இது உங்களைத் தவிர வேறு யாருடைய புத்தியிலும் இல்லை. உங்களிலும் கூட நம்பர்வார் புருஷார்த்தத்தின் அனுசாரம் தான்.

மிகவும் சுலபமானது தான். நமக்கோ இப்போது பகவான் படிப்பு சொல்லித் தருகிறார். அவரை மட்டுமே நினைவு செய்ய வேண்டும். ஆஸ்தியும் அவரிடமிருந்து தான் கிடைக்கின்றது. இந்த பாபாவோ உடனே அனைத்தையம் விட்டு விட்டார். ஏனென்றால் இடையில் சிவபாபாவின் பிரவேசம் நடைபெற்றது இல்லையா? அனைத்தையும் இந்த மாதாக்களுக்கு அர்ப்பணம் செய்து விட்டார். இவ்வளவு பெரிய ஸ்தாபனை செய்ய வேண்டும் என்று பாபா சொல்லியுள்ளார். அதனால் அனைத்தையும் இந்த சேவையில் ஈடுபடுத்துங்கள். ஒரு பைசாவைக் கூட யாருக்கும் தர வேண்டாம். பற்றற்ற நிலை என்பது அந்த அளவுக்கு இருக்க வேண்டும். பெரிய குறிக்கோள். மீரா உலக வழக்கங்கள், விகாரி குல மரியாதாக்களை விட்டு விட்டதால் அவருக்கு எவ்வளவு பெயர் உள்ளது! இந்தப் பெண் குழந்தைகளும் நாங்கள் திருமணம் செய்து கொள்ள மாட்டோம் என்று சொல்கின்றனர். இலட்சாதிபதியாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, நாங்களோ எல்லையற்ற தந்தையிடமே ஆஸ்தி பெறுவோம். ஆக, இதுபோல் நஷா (போதை) ஏற வேண்டும். குழந்தை களுக்கு எல்லையற்ற தந்தையே வந்து அலங்காரம் செய்கிறார். இதில் பைசா முதலியவற்றிற் கான தேவை கிடையாது. திருமண நாளன்று வனவாசத்தில் அமர்த்துகின்றனர். பழைய கிழிந்த உடை முதலியவற்றை அணிவிக்கின்றனர். இந்த தந்தை சொல்கிறார், நான் உங்களை ஞான ரத்தினங்களால் அலங்கரிக்கிறேன். பிறகு நீங்கள் இந்த இலட்சுமி-நாராயணனாக ஆவீர்கள். இதுபோல் வேறு யாரும் சொல்ல முடியாது.

பாபா தான் வந்து பவித்திர இல்லற மார்க்கத்தின் ஸ்தாபனை செய்கிறார். அதனால் விஷ்ணுவுக் கும் நான்கு புஜங்கள் காட்டுகின்றனர். சங்கருடன் பார்வதி, பிரம்மாவுடன் சரஸ்வதியைக் காட்டுகின்றனர். இப்போது பிரம்மாவுக்கு மனைவி யாரும் கிடையாது. இவரோ பாபாவுடையவராக ஆகி விட்டார். எத்தகைய அற்புதமான விசயங்கள்! தாய்-தந்தையோ இவர் தான் இல்லையா? இவர் பிரஜாபிதாவாகவும் உள்ளார். பிறகு இவர் மூலமாக பாபா படைக் கிறார் என்றால் தாயாகவும் ஆகிறார். சரஸ்வதி பிரம்மாவின் மகள் என்பது பாடப் படுகின்றது. இந்த அனைத்து விசயங்களையும் பாபா வந்து புரிய வைக்கிறார். எப்படி பாபா அதிகாலையில் அமர்ந்து விசார் சாகர் மந்தன் செய்கிறாரோ, அதுபோல் குழந்தைகளும் பின்பற்ற வேண்டும். குழந்தைகள் நீங்கள் அறிவீர்கள், இது வெற்றி- தோல்வியின் அற்புதமான விளையாட்டு உருவாக்கப்பட்டது. இதைப் பார்த்துக் குஷி ஏற்படுகின்றது. வெறுப்பு வருவதில்லை. நாம் இதைப் புரிந்து கொள்கிறோம், நாம் முழு டிராமாவின் முதல்-இடை-கடை பற்றி அறிந்து கொண்டு விட்டோம். அதனால் வெறுப் பின் விஷயமோ கிடையாது.

குழந்தைகள் நீங்கள் முயற்சியும் செய்ய வேண்டும். இல்லற விவகாரங்களில் இருக்க வேண்டும். பாவன மாவதற்கான உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் யுகல் (கணவன், மனைவி) சேர்ந்து பவித்திரமாக வாழ்ந்து பவித்திர உலகத்தின் எஜமானர்களாக ஆவோம். பிறகு சிலரோ ஃபெயிலாகி விடவும் செய்கின்றனர். பாபாவின் கையில் சாஸ்திரங்கள் முதலிய எதுவும் கிடையாது. இதுவோ சிவபாபா சொல்கிறார், நான் பிரம்மாவின் மூலம் உங்களுக்கு அனைத்து வேத-சாஸ்திரங்களின் சாரத்தைச் சொல்கிறேன்.

கிருஷ்ணர் அல்ல. எவ்வளவு வேறுபாடு! நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப் பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே!

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) படிப்பின் மீது முழு கவனம் செலுத்த வேண்டும். தந்தை, ஆசிரியா, சத்குருவுக்கு நிந்தனை ஏற்படுகிற மாதிரி எந்த ஒரு கர்மத்தையும் செய்துவிடக் கூடாது. கௌரவத்தை இழக்கச் செய்கிற எந்த ஒரு கர்மத்தையும் செய்யக் கூடாது.

2) விசார் சாகர் மந்தன் செய்வதற்கான பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பாபாவிட மிருந்து கிடைத்துள்ள ஞானத்தைச் சிந்தனை செய்து அளவற்ற குஷியில் இருக்க வேண்டும். யார் மீதும் வெறுப்புக் கொள்ளலாகாது.

வரதானம் : முழுமைத் தன்மை (சம்பூர்ணம்) எனும் ஒளியின் மூலம் அறியாமையின் திரைச் சீலையை அகற்றுபவராக ஒளி தரும் விளக்காகுக

இப்பொழுது பிரத்யட்சதா வெளிப்பாட்டிற்கான நேரம் நெருங்கி கொண்டிருக்கிறது. எனவே அந்தர்முகி உள்முகமானவராக ஆகி ஆழமான அனுபவங்களின் ரத்தினங்களால் சுயம் தங்களை நிரம்பியவராக ஆக்கி கொள்ளுங்கள். உங்களுடைய பரிபூரணத்துவத்தின் ஒளி மூலமாக அறியாமையின் திரை அகன்று விடும் வகையில் அப்பேர்ப்பட்ட ஸர்ச்லைட் ஆகுங்கள். ஏனெனில் பூமியின் நட்சத்திரங்களான நீங்கள் இந்த உலகத்தை குழப்பங்களிலிருந்து காப்பாற்றி சுகமான உலகமாக அமைப்பவர்கள் ஆவீர்கள். புருஷோத்தம ஆத்மாக்களாகிய நீங்கள் உலகிற்கு சுகம் அமைதியின் மூச்சு கொடுப்பதற்கு (நிமித்தமாக) கருவியாக இருக்கிறீர்கள்.

சுலோகன்: மாயை மற்றும் இயற்கையின் ஆகர்ஷணம் கவர்ச்சியில் இருந்து விலகி இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் ஹர்ஷித் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

தனது சக்திசாலி மனம் மூலமாக சகாஷ் சக்தி அளிக்கும் சேவை செய்யுங்கள்.

மனதில் எப்பொழுதும் சுபபாவனை அல்லது ஆசிகள் அளிக்கும் இயல்பான அப்பியாசம் ஏற்பட்டு விட்டது என்றால் உங்களது மனம் பிஸி மும்முரமாக ஆகிவிடும். மனதில் ஏற்படும் குழப்பங்களிலிருந்து இயல்பாகவே ஒதுங்கி போய் விடுவீர்கள். சில நேரங்களில் தங்களது புருஷார்த்தத்தில் மனமுடைந்து போய் விடுகிறீர்கள். அவ்வாறு இப்பொழுது ஏற்படாது, மாயாஜாலம் ஏற்பட்டு விடும்.